# காஞ்சி!

நிறுவனர்: அறிஞர் அண்ணா.

28 - 10 - 1973

மலர் : 10 ★ இதழ் : 16


★

உள்ளே......


மரண அடி கொடுப்பாராம்! (தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

என்றைக்காவது ஒருநாள் (தலையங்கம்)

★

குறளமுதம் - 3 (கட்டுரை)

★

சிதறிய முத்து (சிறுகதை)

★

மெல்லிய காதல் (தொடரோவியம்)


★

## நடடா வரிப்புலியே!

**வங்கனூரான்**

தமிழ்த்தாயினை வதைப்போர்செயல்
தடைமீறுதே இங்கே
தடந்தோளுனக் கிலையாயென
தலையாம்கவி வேந்தன்

நமைக்கேட்பதும் செவிகேட்டிட
நடடாவரிப் புலியே!
நலம்நல்கிடும் தமிழன்னையை
நலம்வாய்ந்திடச் செய்வோம்!

இனிமைச்சுவை முழுதும்கெட
இனிக்கும்தமிழ் மொழியில்
இனியும்சுவை பெருகிப்புக
இளைஞர்செயல் தேவை!

உனதாகிய பழமைப்புகழ்
உலகோர்இனி உணர
உழைப்பாய்ப்புதுப் புதுநூலினை
உருவாக்கிடல் வேண்டும்!

இனிக்கின்றநம் தமிழ்த்தேனினை
எவனுவது பழித்தால்
இருகண்களும் சிவப்பேறிட
இழிவாம்செயல் மாய்ப்போம்!

கனவாடிடும் மனத்தொட்டிலைக்
கயவர்மனம் விடுத்தே
கடலாம்மடி யினில்சேர்த்திடல்
கடமை! உணர் தம்பி!

எவராயினும் எதுநேரினும்
இறப்பொன்றுதான் அறிவாய்!
இனிதாகிய அமுதத்தினை
இருக்கும்வரை காப்பாய்!

தவறாகிய வழியாமதில்
தமிழாஇனி நடவாய்!
தமிழைஇனிப் புகழாதவன்
தமிழன்அலன்! அறிவாய்!


விலை : 0-25 காசு

# குறளமுதம் - 3

(18-4-73 காலை 6-04)

மு. பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,

அழுக்காறு கொண்ட மனத்தில் அமைதி இருக்காது. குழப்பம்தான் குடிகொண்டிருக்கும். பொறாமை கொண்ட நெஞ்சத்தில் நிம்மதி இருக்காது. எந்நேரமும் மனப் புழுக்கம்தான் நிறைந்திருக்கும்.

பொறாமைக்கு ஆட்பட்டவர்கள், மற்றவர்களின் மகிழ்ச்சி கண்டு கூடப் பொறுக்க முடியாமல் தத்தளிப்பார்கள்; மற்றவர்களின் வளமான வாழ்வு கண்டு மனம் புழுங்கி வருந்துவார்கள்; நிம்மதியின்றித் தவிப்பார்கள். அதனாற்றான் அத்தகைய பொறாமைக் குணத்தினை அறவே நீக்கவேண்டும் என வலியுறுத்திக் கூறுகிறார்.

பொறாமையால், மனம் புழுங்கி நாளும் செத்துக் கொண்டிருப்பவர்களை நாம் அன்றாடம் காணத்தானே செய்கிறோம், "இவனுக்கு இப்படி ஒரு வாய்ப்பா?" என்று வயிறு எரியும் பொறாமை உருவங்கள் நம் கண்முன் நிழலாடத்தானே செய்கின்றன. 'மேலிடத்தில் இவனுக்கு இவ்வளவு செல்வாக்கா?' எனப் பொறுக்க முடியாமல் புலம்பித் தவிப்போரை நாளும் சந்தித்துக்கொண்டுதானே இருக்கிறோம், 'இவனுக்கா தலைமை?' என இதயம் வெந்து! பொறாமையால் நைந்து ஏளனம் செய்வோரின் எக்காளக் குரல்கள் காற்றிலே மிதந்து காதுகளில் விழாமலா இருக்கின்றன?

இத்தனை பொறாமைகளாலும் இயங்கிக் கொண்டிருக்கும் இப் பொல்லாத உலகில் ஆக்கமும் கேடும் தோன்றிக் கொண்டுதான் வருகின்றன, யார் நல்லவர் என்று பார்த்துத்தான் சிறப்புக்கள் பலவும் போய்ச் சேருகின்றனவா? யார் கெட்டவர் என்று பார்த்துத்தான் கேடுகள் பலவும் போய்க் கூடுகின்றனவா?

நல்லவர்களுக்குத் துன்பமும், கெட்டவர்களுக்கு நன்மையும் என முறைமாறிப் போவதும் உலக இயல்பாக உள்ளதன்றோ? அதற்குக் காரணம் யாது? நம்மைச் சிந்திக்க வைக்கிறார் செந்நாப் போதார்! சிந்தனையைக் கிளறிவிடும் சீரிய குறளமுதம் இதோ:-

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்."

பொறாமைக் குணம் உடைய புல்லர்கள் செல்வச் சிறப்போடு இருப்பதும், பொறாமைக் குணமே சிறிதும் இல்லாத நல்ல மனம் உடையவர்கள் சிறப்பிழந்து சீர்கேடு அடைவதும் ஏன்? எனக்கேட்டு செயலிழந்து கிடக்கும் நம் சிந்தனைப் பொறியைத் தட்டிவிடுகிறார், வழிகாட்டும் ஒளிவிளக்காம் வள்ளுவப் பெருந்தகை.

அழுக்காறு என்னும் பாவி, தீய வழியில் கொண்டு போய்த் தள்ளிவிடும் என முன் குறளில் முடிந்த முடிபாகக் கூறிய வள்ளுவருக்கு, ஏன் இந்த இக்கட்டான நிலை ஏற்பட்டது. பொறாமை உடையவனுக்கு நன்மையே இல்லை என முடிவாகக் கூறிவிட்ட பிறகு, "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்" எனக் குறிப்பிடவேண்டிய அவசியம் என்ன?

இதில்தான் வள்ளுவரின் வாழ்க்கை விளக்கமே அடங்கியிருக்கிறது. வெறும் நீதிகளை மட்டும் மேலோட்டமாகச் சொல்லிச் செல்லும் "போதகர்" மட்டுமல்லர், வள்ளுவர். வாழ்க்கையை ஊடுருவிப் பார்த்து, நன்மை தீமைகளை ஆராய்ந்து சொல்லும் அனுபவப் புலவர் அவர். பொறாமை நெஞ்சம் உடையோராய் இருந்தும், வளமான செல்வங்கள் வந்து அடைகின்றனவே! நல்ல மனம் உடையோராய் இருந்தும் வறுமைத் துன்பங்கள் வந்து, வாட்டுகின்றனவே! இங்ஙனம், வாழ்க்கை அனுபவத்தில் கண்ட உண்மைகளைக் கூறி, அவை 'ஆராயத் தக்கவை' என மேலும் சிந்திப்பதற்கு வழிகோலுகின்றார். இங்ஙனம் நிகழ்வது பரவலாக இல்லையெனினும் அதன் காரணம் என்ன என்பதை அறிய வேண்டும் என ஆணித்தரமாகவும் கூறுகிறார். பொறாமை உடையவர்கள் செல்வ வளத்தோடு நிம்மதியாக வாழ்வதைக் கண்டவுடன், நமக்கும் அந்த எண்ணம் வந்துவிடக் கூடாதன்றோ? அதனாற்றான், அதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என ஆணையிடுகின்றார்.

பொறாமை கொள்கின்றவன் கேடு அடைவது நியதியே என்றாலும், முன்வினைப் பயனால் ஒருவேளை செல்வச் சிறப்புக்களைப் பெற்றிருக்கலாம் என்று கருதுவோரும் உண்டு. இதற்கு,

"இம்மை செய்தன யானறி நல்வினை;
உம்மைப் பயன்கொல், ஒருதனி உழந்து, இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"

எனச் சிலம்பதிகார அடைக்கலக் காதையில் மாடலன் கோவலனைப் பார்த்து உரைப்பதை எடுத்துக்காட்டாக மொழிவர். இப்பிறவியில் நல்வினையே செய்த கோவலன், பலவித இன்னல்களுக்கு ஆளான காரணம் பழவினையே என்பது மாடலமறையோன் கண்டு பிடிப்பு. ஆனால், அதே நிலையில்தான் வள்ளுவரும் கருதுகிறார் என நினைப்போமானால், அதுவே ஆய்வுக்குரியதாக அமைந்துவிடும்.

பொறாமைக் குணம் உடையவனுக்கு ஆக்கம் வந்தது எனில், அக்குணத்தால்தான் அது வந்ததாகக் கருத முடியாது. அதற்கு வேறு காரணமும் இருக்கலாம் அன்றோ? அதைப் போலவே பொறாமை கொள்ளாத நல்லவனுக்குக் கேடு வருகிறது எனில், அக்கேடு, அவன் நற்குணத்தால்தான் வந்தது எனக் கருத முடியாது. அதற்கும் வேறு காரணம் இருக்கலாம் அன்றோ? உண்மையை உரைப்பதில் மிக உறுதியாக நாம் இருந்திட்டால் அரிச்சந்திரனைப் போல் துன்பப் படத்தான் வேண்டும் என்று முடிவுகட்டிவிடலாமா? பொறாமை இன்றி நல்லவர்களாக இருந்தால், கேடுதான் வந்து சேரும் என்ற முடிவுக்கும் வந்துவிடக் கூடாதல்லவா? ஆகையால்தான், அவைகளுக்குரிய காரணங்களை ஆராயவேண்டும் என்பதோடு தன் கருத்தையும் முடித்துக்கொள்கின்றார் வள்ளுவர். பழவினை பற்றி வள்ளுவர் எதுவும் இக்குறளைப் பொறுத்த அளவில் கூறவில்லை.

பழவினைப்பயன் இருந்தால் நமக்கு ஆக்கம் வரும் என்று எண்ணிக் கொண்டு, இப்பிறவியில் பொறாமைச் சேற்றில் புரளலாம் எனக் கருதுவது அறிவுடைமை ஆகாது. நன்மையே தருவதாக இருப்பினும், பொறாமை காரணமாக வரும் ஆக்கத்தை வெறுத்து ஒதுக்கும் மனப்பக்குவத்தைப் பெறுவதுதான் வள்ளுவர் காட்டிய வாழ்க்கை முறையாகும். அஃதன்றி...நடைமுறை வாழ்க்கையில் பொறாமைப் படுகின்றவன்தானே நன்றாக வாழ்கிறான் என்று நினைத்து, நாமும் அவன் வழியைப் பின்பற்றுதல் கூடாது. நாம் பின்பற்ற வேண்டியதோ, குறள் வழி! பொறாமைக் குண வழி அன்று. வெல்க குறள் நெறி'

(நன்றி : சென்னை வானொலி நிலையம்)

# "காஞ்சி"

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 28—10—73 | இதழ் 16


# என்றைக்காவது ஒருநாள்....

மாநிலங்களில் சுயமரியாதை கெடாமல் உரிமைகள் கெடாமல், பாதுகாக்க வேண்டுமென்றுதான் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் கடைசியாக உயிலில் மாநிலங்கள் அதிக உரிமைகளைப் பெற அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கூறினார். அதைத்தான் இன்று **கலைஞர் மாநில சுயாட்சி** என்கின்றார்.

துணைக்கண்டத்தின் பல மாநிலங்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கோரிக்கைக்கு வரவேற்புக் கிடைத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், துரதிருஷ்டவசமாக தமிழ் நாட்டுக்குள்ளேயே சிலர் இன்று எதிர்ப்புக் காட்ட முன்வந்திருக்கிறார்கள்.

மாமியார் உடைப்பதனாலேயே மண்சட்டி பொன்சட்டியாகி விடுவதில்லை என்பதும், மருமகள் உடைப்பதனால் மட்டும் பொன்சட்டி மண்சட்டியாகி விடுவதில்லை என்பது தெரிந்திருந்தும், சிலபேர் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சுயாட்சிக் கோரிக்கையை, முன்பு தி, மு, க. திராவிடநாடு கேட்டது என்ற காரணத்தைக் காட்டி சுயாட்சி கோரிக்கையை பிரிவினை வாதம் என்று விமர்சிப்பதுடன், தற்கொலைக் கொப்பான நிகழ்ச்சி என்றும் எடுத்துக் காட்டி மக்களின் வள வாழ்வுக்கு மாறான தடம் அமைத்திட முயன்று கொண்டிருக்கிறார்கள்.

"தி. மு. க.வின் மாநிலசுயாட்சி கோரிக்கை தனி தமிழ் நாடு கோரிக்கையே தவிர வேறல்ல" என்று தமிழகத்தின் முன்னாள் முதன் மந்திரி கனம் பக்தவத்சலம் அவர்கள் கூறியுள்ளார்.

1964-ஆம் ஆண்டிலே கனம் அவர்கள் தமிழகத்தின் முதன் மந்திரியாக இருந்த காலத்திலே, **"மாநிலத்திலே சுயஆட்சி, மத்தியிலே சமஷ்டி"** என்பதை காங்கிரஸ் கட்சியே ஒத்துக்கொண்டது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் அபுல்கலாம் ஆசாத், காந்தி, பட்டேல், நேரு போன்ற எல்லாத் தலைவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே முன்பு காங்கிரஸ் ஒத்துக்கொண்டதைத்தான் இன்று கழகம் கேட்கிறது. இதை ஏன் மறந்துவிட்டாரோ தெரியவில்லை கனம் அவர்கள். அல்லது கழகம் தமிழக மக்களுக்கு ஆற்றிவரும் தொண்டினைக் கண்டு மனம் வெதுப்பி கூறுகின்றாரா என்றும் தெரியவில்லை.

தி. மு. கழகம் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டது என்று ஆயிரக்கணக்கான மேடைகளில் சொல்லி தெளிவுபடுத்திவிட்ட பிறகும், மாநாடுகள் வாயிலாக எடுத்துக் காட்டியப் பிறகும், சட்ட மன்றத்திலேயே **பேரறிஞர் அண்ணா** அவர்களாலும், மற்ற மாண்புமிகு **அமைச்சர்களாலும்** எடுத்துக் காட்டிவிடப் பட்டிருப்பதற்குப் பிறகும், தி. மு. க,வின் சுயாட்சிக் கோரிக்கைக்குக் களங்கம் கற்பிக்க நினைப்பவர்கள் தமிழ் நாட்டின் எதிர்காலத்துக்கே உலைவைக்க நினைக்கிறார்கள் என்றுதான் கருதவேண்டி இருக்கிறது.

மத்திய அரசிடமிருந்து, தங்களுக்கு எந்தெந்த அதிகாரகங்கள் எல்லாம் தேவையில்லை என்று அடுக்கிக் காட்டி இருக்கிறார் **கலைஞர்** அவர்கள்.

**இராணுவ நிர்வாகம் எங்களுக்குத் தேவையில்லை;**

**பாதுகாப்புப் பற்றிய அதிகாரங்கள் தேவையில்லை;**

**வெளிநாட்டுறவு பற்றிய அதிகாரங்கள் தேவையில்லை;**

**மாநிலங்களுக் கிடையேயான போக்குவரத்து—செய்தி தொடர்பான அதிகாரங்கள் தேவையில்லை;**

**ரூபாய் நோட்டு அச்சடிப்பது எங்களுக்குத் தேவையில்லை.**

—என்று திட்டவட்டமாக எடுத்துக் காட்டி இருப்பதுடன், மற்ற அதிகாரங்கள் குறித்து பரஸ்பரம் பேசி உடன்பாட்டுக்கு வந்து தீர வேண்டும் என்பதையும் விளக்கி இருக்கிறார்.

கழகத்தின் சுயாட்சிக் கோரிக்கைக்குக் கிடைக்கும் ஆதரவு மூலம், பிரிவினைச் சக்தி, வலுப்பெற்றுவிடும் என்று எவரேனும் கருதுவார்களானால், அந்தப் பிரிவினைச் சக்தியை வேருடன் கெல்லி எறிய மேலே குறிப்பிட்டிருக்கும் அதிகாரங்களில் சிலவே போதுமானதாகும். அவை அனைத்தும் மத்திய அரசிடமே இருக்கட்டும் என்று தெளிவாக விளக்குவதன் மூலம், கழகத்தின் தூய இதயத்தை வெளிப்

படுத்தி இருக்கிருர் என்றே மகிழ்ச்சியடைய வேண்டும்.

தவிர, "மாநில சுயாட்சியைவிட அதிகமாக, திராவிட முன்னேற்ற கழகம் கோரிக்கை விடுக்கிறது" எனக் கூறிய நமது பிரதமருக்கு, "மாநில சுயாட்சி தருவதாக இந்தியப் பிரதமர் கூறட்டும்; அதைவிட அதிகமாக நாங்கள் கேட்கவில்லை என்று எழுதித் தரத் தயார்" என்று தமிழகத் தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள் பதில் கூறும் வகையில் பேசியுள்ளார்.

எனவே, தெளிவடையவே கூடாது என்று இருளுக்குள் புதைந்து கிடப்பவர்கள் தவிர, சந்தேகத்தில் ஊசலாடிக் கொண்டிருப்போருக்கு இந்த விளக்கங்கள் போதுமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**நாட்டு மக்களின் நலிவு தீர—சமதர்மத் திட்டங்கள் நிறைவேற—சோஷலிசச் சமுதாயம் உருவாக—மாநில சுயாட்சிக் கொள்கை தேவையென உணர்ந்து அதை ஏற்றோம்! அதில் பிரிவினை வாடை இல்லவே இல்லை! அந்த மாநில சுயாட்சியை இன்று இல்லாவிட்டால் நாளை; நாளை தவறினால், நாளை மறுநாள் அல்லது என்றைக்காவது ஒருநாள் மாநில சுயாட்சி நாம் பெற்றே தீருவோம்.**

—கே. எஸ். ராஜன்

**அடுத்த கிழமை இதழில்**

**பேராசிரியர் மு. பி. பா. அவர்களின்**

**குறளமுதம் - 4**

**இடம் பெறும்.**

# மக்கள் மடல்

**அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,**

கன்னித் தமிழ்க் காவலனும் அண்ணு தந்த "காஞ்சி" இதழ்களை தொடர்ந்து சுவைத்து வருகிறேன். 30—9—73 வார இதழில் கவிஞர் மணிவேந்தன் அவர்களின் "அண்ணல் காந்தி" எனும் வண்ணக் கவிதை சிறப்பாக, சுவையாக இருந்தது "கடுகடுத்த வெள்ளையனே கலகலத்துப் போய் விட்டான்" என்ற அடிகளில் அவர் கையாண்ட லாவகம்—இயற்கையோடு பணியினை—சுவையாக இருக்கிறது. அதர்மம் அழியும் எழிலை அதில் கோடிட்டு உணர்த்தி யுள்ளார் கவிஞர்—"

இம்முறை வந்த—மருதனு—மருதாணியா? என்ற சிறுகதை உள்ளம் கவர்ந்தது. பழந்தமிழ் நாட்டின் ஒரு தலைவனையும், தலைவியையும் அழைத்து வந்து—சிறுகதையாக்கி—சென்ற எழுத்தாளர் "சபாஷ்" பெறுகிருர்.

அடம்பன் இலங்கை. செல்வி எஸ். இராஜம்புஷ்பவனம்
19—10—73

ஃ ஃ ஃ

**அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,**

7—10—73 வார 'காஞ்சி' இதழைப் பார்த்தேன்; பூரித்தேன். முகப்பு அட்டையிலுள்ள, பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் இதழுக்கு இணையில்லா அணிசெய்கிறது. 'சீனத்துப் பரணி' நல்லதோர் திறனுய்வு. திறனுய்வே இப்படி இருக்கும்போது நூல் எப்படி இருக்குமோ!

பேரறிஞர் அண்ணுவின் மடல்கள், அன்றைய போது நான் படிக்கத் தவறிய புதையல்களை இன்றைக்கு எனக்குப் படையலாக்குகிறது,

கீதாமணுளன், அவர்கள் எழுதிய "தாமரையாள் ஏன் சிரித்தாள்?" என்ற உருவகக் கதையால் என்னுள்ளத்தில் நீங்காத ஒரு நிறைவை ஏற்படுத்தி விட்டார்.

வாலாசாப்பேட்டை வலசை து. செயராமன். பி.டி.,
7—10—73

ஃ ஃ ஃ

**அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,**

இவ்வார 14—10—73 காஞ்சியின் குறளமுதம் எளிய புரிகிற உணர்வுடன் தரப்பட்டிருக்கிறது. பட்டமரம் சொன்ன கதை பக்குவமுடன் வந்த கவிதை. நிலவுப்பெண் எழில் காட்டுகிருள்.

அண்ணனின் கவிதை நடைக்கட்டுரை (கடிதம்) கருத்துச் சுகம் தருகிறது. மொத்தத்தில் காஞ்சி ஒவ்வொரு வாரமும் மெருகேற்றிக் கொள்கிறது என்பதே சாலப் பொருந்தும்.

காமாட்சிபுரம் ந. பாண்டுரங்கன்
22—10—73

**தம்பி**


# மரண அடி கொடுப்பாராம்!

மரண அடி கொடுக்கப் போகிறேன் என்று பிரகடனம் செய்து விட்டுள்ளார் காமராஜர். எதிர்கட்கிகளுக்குத்தான்!

இவர் பாசம் பொழிவார், ஆதரவு அளிப்பார், என்றா எதிர்க் கட்சிகள் எண்ணிக் கொண்டிருக்க முடியும்! தாக்குவதற்குத்தான் துடித்துக்கொண்டிருப்பார், அதற்கே திட்டமிடுவார் என்பது எல்லோருக் கும் புரியும்! இதை இவர் சொல்லித்தானா எதிர்க்கட்சிகள் தெரிந்து கொள்ள வேண்டும்! நன்றாகத் தெரியும், மிக நன்றாகத் தெரியும், எதிர்க் கட்சிகளை ஒழித்துக் கட்டினாலொழிய, தனது கட்சிக்கு எதிர்காலம் இல்லை என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில், 'அகில இந்தியா' இருக்கிறார் என்பது. ஆகவே அவரிடமிருந்து எதிர்க்கட்சிகள் தாக்குதலைதான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்; தட்டிக்கொடுப்பார் என்ற நினைப்புடனா இருக்கமுடியும்! அந்நிலையில் காமராஜர் மரண அடி கொடுப்பேன் என்று பேசியிருப்பது, எதிர்க்கட்சிகளை நோக்கி அல்ல!

சஞ்சலமும் சந்தேகமும் கொண்டு, ஆருடம் பார்த்தபடி இருக் கும் அவருடைய கட்சிகாரர்களுக்கு, 'தைரியம்' ஊட்டுகிறார்; அஞ்சாதீர் கள்! நான் இருக்கிறேன்—மரண அடி கொடுக்கிறேன் எதிர்க்கட்சிகளுக்கு என்று பேசுகிறார்!

"பயலின் கையைக்காலை வெட்டிப் போட்டுவிடுகிறேன், பயப்பட வேண்டாம்" என்று நிலப்பிரப்புக்குத் தைரியம் ஊட்டிவிட்டு, 'செலவுக்கு' வாங்கிக்கொண்டு, உல்லாசத்தைத் தேடிச் செல்லும் உருட்டு விழியினர் உள்ளனர்; அறிவோம் அல்லவா!



வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை, கற்பழிக்க முனைந்தால் மூண்ட பகை போன்றவை களிலே சிக்கிக்கொள்ளும் சீமான், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று அச்சம் கொண்டு நடுங்கிடும் போது, குத்திக் குடலெடுப்போன், குறிபார்த்து வேல் வீசுவோன், மடக்கி அடிப்போன், மறைந்திருந்து வெட்டுவோன் போன்ற பேர்வழிகள், "ஐயா மட்டும் கொஞ்சம் தாராளமாகச் செலவுக்குப் பணத்தைக் கொடுத்தால், ஒரு நொடியிலே தீர்த்துக் கட்டிவிடுகிறேன்—தலை வேறு, முண்டம் வேறு ஆக்கிவிடுகிறேன். ஐயா எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. நான் காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொடுக்கிறேன். ஐயா மட்டும் செலவுக் குப் போதுமானதைத் தந்து பார்க்கட்டும்...ஐய்யா வோட வம்புக்கு நின்றவனே உருத்தெரியாமல் செய்து விடுகிறேன்" என்று பேசுவர். பலர் சொன்னபடி படுகொலையும் செய்வர்; பிடிப்பட்டால், தப்பவைக்க 'ஐயா' வருவார் ஏதாவது வழி கண்டு பிடிப்பார், என்று துணிச்சலாகப் பாய்வர். இது கீழ் மட்டத்து நிலைமை.

மேல்மட்டத்தில்—அதிலும் மக்களை நடத்திச் செல்லும் தகுதி பெற்றவர்கள் என்ற விருது கொண்ட அரசியல் கட்சி மட்டத்தில்—பொதுமக்க ளின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள தன்னலக்காரர்கள் — தருக்கர்கள் — தங்கள்மீது மக்களின் சீற்றம் பாய்ந்திடும், தங்கள் ஆதிக்கம் சாய்ந்துபடும் என்ற நிலை ஏற்படும்போது, காமராஜர்போல, செல்வாக் கினைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களை நாடுவர்; அப்போது காமராஜர்கள் "பயப்படாதீர்கள்! எதிரி களை ஒழித்துக்கட்டுகிறோம்; உமக்கு ஒரு ஆபத்தும் வராதபடி பார்த்துக்கொள்கிறோம்" என்று பேசி தைரியம் அளிப்பார்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு மரண அடி கொடுப்பேன்!—என்று காமராஜர் பேசியிருப்பது, இந்த விதமானது! வேறு இதிலே தனிச்சிறப்பு என்ன இருக்க முடியும்! இதில் என்ன தத்துவ விளக்கம் இருந்திட முடியும்! தேர்தலின்போது தங்கள் கதி என்ன ஆகுமோ என்ற கிலி கொண்டுவிட்டுள்ள கனதனவான்களுக்கு, காமராஜர் தைரியம் ஊட்டுகிறார்; செலவுக்குப் பணம் வாங்கிக்கொண்டு ஆளைத் தீர்த்துக் கட்டிவிடு கிறேன் என்று பேசுகிறானே 'அறிவாள் தூக்கி' அவன் போன்றாரின் பேச்சைத்தான் காமராஜரின் மிரட்டல் என் நினைவிற்குக் கொண்டு வந்தது.

குழிதோண்டிப் புதைப்பேன்
கூண்டோடு தொலைப்பேன்
பூண்டு இல்லாமல் ஒழித்திடுவேன்
மரண அடி கொடுப்பேன்

என்பவைகள், தம்பி! எதிர்க் கட்சிகளை மிரட்டுவதற் காகக்கூட அல்ல, சொந்தக் கட்சியிலே உள்ள சோர் வினைப் போக்கிடத்தான் என்பதைப் புரிந்துகொண் டால், நமக்குக் காமராஜரிடம் கோபம் வருவதற்குப் பதிலாக, பச்சாதாப உணர்ச்சிதான் எழும். அவரே கூடச் சில வேளைகளில் வருத்தப்படக்கூடும். இந்த வேலைதானு நமக்கு இப்போதுகூட! நாடு கொண் டாடுகிறது! உலகம் வரவேற்கிறது! இதழ்கள் பாராட்டுகின்றன! விழா எடுக்கிறார்கள்! விழுந்து வணங்குகிறார்கள்! வரம் கேட்கிறார்கள்! வழியிலே மலர் தூவுகிறார்கள்!!—ஆனால் நாம் என்ன வேலையில் ஈடுபடவேண்டி இருக்கிறது, எந்தப் பாணியில் பேச வேண்டி ஏற்படுகிறது, சே!—என்று அவரேகூடச் சில வேளைகளிலே எண்ணி, சலிப்பும், வருத்தமும் கொள்ளக்கூடும்.

"மேடை பிடித்தான்கள்" பேசவேண்டிய பேச் சல்லவா இது,

சில்லறைகள் அல்லவா இப்படிச் சீறிப் பேசுவர்,

சந்து முனைகளில் அல்லவா இப்படிப்பட்ட சிந்து கேட்கும்,

நாம் இப்படிப் பேசலாமா! ஆனால் பேசவேண்டி இருக்கிறதே!! இப்படிப் பேசித்தானே நம்மவர்களுக் குத் தெம்பு தரவேண்டி இருக்கிறது என்று எண்ணி அவர் வருத்தப்படாமலிருக்க முடியாது.

ஆண்டு பல உழன்றவர் அரசியலில்; படிப்படி யாக உயர்ந்தவர்; இன்று பலரும் பார்த்து பாராட் டத் தக்க நிலைக்கு வந்தவர்; ஆயினும் பாவம், மிகப் பழைய நாட்களில், தமிழக அரசியலில் கடைக்கோடு வரிசையில் இடம் பெற்றிருந்த நாட்களில், பேசிய பேச்சையா, இப்போதும் பேசுவது எவ்வளவு மேன் மையான வளர்ச்சி! ஆயினும் எத்தனை வேகமான வீழ்ச்சி!! ஏன்? பரிதாபம்!!

குற்றாலம் சென்று குழாயடியில் குளிப்பது போல,

திருக்குளத்தில் இறங்கி 'பாசி'யைப் பற்றி எடுத்து வருவதுபோல,

சந்தனத்தைக் கரைத்து மாட்டுத் தொழுவத்தில் தெளிப்பதுபோல,

கரும்பைக் கொண்டுவந்து அடுப்பெரிப்பதுபோல,

இசைப் புலமை பெற்ற பிறகு, கோட்டான் போலக் கூவிட முயல்வது போல,

பொன்னாடையை வாங்கி அதனை புழுதியைக் கட்டிடப் பயன்படுத்துவது போல,

யானைமீது அம்பாரி அமைத்து அமர்ந்து, பூனை பிடிக்கச் செல்வது போல,

உடைவாளை வீசி உருளைக் கிழங்கை வெட்டுவது போல,

பூந்தோட்டம் சென்று ஊமத்தம்பூ கேட்பது போல,

கழனியை உழுதுவிட்டுக் கள்ளிச்செடி நடுவது போல,

சாமியார் ஆகிவிட்டு மாமியார் வீட்டுக்குச் சாம்பிடப் போவதுபோல,

திருவிளக்கு வெளிச்சத்தில் திருட்டுக் கணக்கு எழுதுவதுபோல,

இளநீர் பருகிட மறுத்து கழுநீர் குடித்திடத் துடிப்பதுபோல,

தங்கத் தாம்பாளத்தில் தவிடு கொட்டி வைப்பது போல,

தம்பி! அகில இந்தியக் காங்கிரசுக்குத் தலைவராகி, இவர் இந்த 'மரண அடி' பேச்சுத்தானு பேச வேண்டும்.

இந்தியாவின் எல்லைப் பிரச்சினையை விளக்கக் கூடாதா! எதிர்பார்க்க மாட்டார்களா!!

சர்வதேசப் பிரச்சினைகளை அலசக்கூடாதா! பதவி அவ்வளவு பெரிதாயிற்றே!!

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் காட்டக்கூடாதா! இவரிடம் அதற்கான விவரம், விளக்கம் இருக்க வேண்டுமே!!

கொதித்ததே பத்து நாட்கள், பாராளுமன்றத்தில் அமீன்சந்த்பியாரிலால் விவகாரம், தேஜோ விவகாரம்,—சிறிதளவு அக்கறை காட்டக்கூடாதா அவைகளைப்பற்றி!

நாணய மதிப்புக் குறைப்பு, அதன் விளைவு, இவை பற்றிய விளக்கம் அளிக்கக்கூடாதா?

பணக்கார ஆதிக்கத்தைப் போக்க என்ன திட்டம் வைத்திருக்கிருர் என்பதனைக் கூறக் கூடாதா?

சேலம் இரும்பாலை—கல்பாக்கம் திட்டம்—சேதுசமுத்திரத் திட்டம்—இவைகள் பற்றிப் பேசக் கூடாதா? மக்கள், கேட்க மறுப்பார்களா?

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழர்களுக்காக என்ன திட்டம் இருக்கிறது ஆளவந்தார்களிடம்? பர்மாவில் தமிழர்கள் விட்டு விட்டுவந்த சொத்து எப்போது கிடைக்கும்? என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது? சொல்லக் கூடாதா?

மொழிப் பிரச்சினைபற்றிப் பேசக்கூடாதா? ஏன் இன்னமும் நேருவின் வாக்குறுதிக்குச் சட்ட வடிவம் கொடுக்கவில்லை? விளக்கம் தரலாகாதா!

'மரண அடி கொடுப்பேன்' என்ற பேச்சுக்கு மட்டுந்தானு இத்தனை உயர்ந்த இடம் இருப்பவர் தனக்குத் தகுதி இருப்பதாக எண்ணிக்கொள்வது.

ஏன், அவர் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதில்லை? பிடி! அடி! விடாதே!! என்ற தெருக்கோடி ஒலி எழுப்புவதிலேயே சுவைகாட்டுகிருர்?

காரணம் இருக்கிறது தம்பி! தகுந்த காரணம் இருக்கிறது!

தெரியும் அண்ணு! தெரியும்! இவருக்கு எந்தப் பிரச்சினையின் விளக்கம் புரிந்திருக்கிறது, மற்றவர்களுக்கு விளக்கிட!!—என்று கூறுவாய், தம்பி! எப்படிப்பட்ட பதவியில் இருக்கிருர்; அவரைப்பற்றி இப்படிப்பட்ட கருத்துக்கொண்டிடலாமா? தவறுமிகத் தவறு!

பிரச்சினைகள் புரிந்திருக்கிறது என்கிருயே அண்ணு! அப்படியானுல் ஏன் அவைகளைப்பற்றிப் பேசவில்லை—என்று கேட்கிருயா தம்பி! அவர் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினுல், அவருடைய கொலுமண்டபத்துக் கோமான்கள் உற்சாகம் கொள்ள முடியவில்லை.

அவர்கள் விரும்புவது தோள்தட்டி, துடைதட்டி, ஜல்லடம்கட்டி, 'கோதா'வில் இறங்கி, நண்டுப்பிடி போடுவது, மின்னல் தாக்குதல் நடத்துவது, கரடிப்பிடி போடுவது, மரண அடி கொடுப்பேன் என்று சவால் விடுவது ஆகிய இவைகளை.

அப்போதுதான் அவர்களுக்கு, அச்சம் குறைகிறது, உற்சாகம் பிறக்கிறது, ஒரு புது தைரியம் வருகிறது.

அதற்காகத்தான் அவர் பாவம், தமது நிலையையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த 'ஓங்கார'க் கூச்சலைக் கிளப்பிக் காட்டுகிருர்.

மரண அடி கொடுத்திடவேண்டும் என்ற கோபம் கிளம்பும் அளவுக்கு தி. மு. கழகம் என்ன கேடான காரியம் செய்தது? வன்முறையால் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டதா? வரிகொடா இயக்கம் நடத்தி சர்க்கார் நடக்கவிடாமல் செய்ததா? வகுப்புக் கலவரத்தை மூட்டிவிட்டு, சமூகத்திலே சிதைவு ஏற்படச் செய்ததா? கள்ளமார்க்கெட் நடத்துபவனுக்கும் கொள்ளை இலாபம் அடிப்பவனுக்கும் துணை நின்றதா? என்ன கேடு செய்தது?

ஆளுங் கட்சியான காங்கிரசை ஆட்சிப் பீடத்திலிருந்து கீழே இறங்கவேண்டும் என்பதற்காக வேலைசெய்கிறது.

ஆட்சிப் பீடத்தில் பல ஆண்டுகளாக இருந்தும் மக்களுக்கு முழுவாழ்வு அளிக்கத் தவறிவிட்டதால், ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா? என்று கேட்கிறது.

அவ்விதம் கேட்பதும் ஆட்சியை மாற்றுவதும் ஜனநாயகக்கடமை என்பதால், தி. மு. க. அந்த முனையில் வேலைசெய்கிறது. இது தவருகுமா? இதற்காகவா, கழகத்துக்கு மரண அடி கொடுக்க நினைக்கிருர்!

கோபம், காரணமற்றது! உள்ளது பறிபோய்விடுமே. சுவைத்ததை இழந்திடவேண்டி வருமே என்பதாலே கிளம்பிடும் அச்சம் அவ்விதம் பேசவைக்கிறது.

அதற்குத் தேவைப்படும் வலிவு, காங்கிரசிடம்-காமராஜரிடம் இருக்கிறது என்றே வைத்துக்கொள்வோம்—வலிவு இதற்குத்தானு பயன்படவேண்டும்!

ஒரு கட்சிக்கும், ஒரு பெரிய தலைவருக்கும் வலிவு இருக்குமானுல், அந்த வலிவு எதற்குப் பயன்படுத்தப் படவேண்டும்? உருட்டல் மிரட்டலுக்கா!

பஞ்சம் பிணி போக்கிட,

வளம் பெருக்கிட,

புதுவாழ்வு அமைத்திட,

நாட்டு மானம் காத்திட

இவை போன்றவைகளுக்கல்லவா வலிவு பயன்படுத்தப்பட வேண்டும்? செய்து முடிக்க வேண்டியவைகளை, செய்வதற்கான இடத்தில் இத்தனை ஆண்டுகளாக இருந்துகொண்டு, செய்து முடித்திட அந்த வலிவு பயன்படக் காணும்; வீறுப்புப் பேசுகிருர்—மரண அடி கொடுப்பேன் என்பதாக. என்னமோ இவர் இத்தனைக் காலமாகப் போனுல் போகட்டும் என்ற போக்கிலே இருந்தவர்

போலவும், தி. மு. கழகம் வளர்ந்து போகட்டுமே என்று கருதி வாளாக இருந்தவர்போலவும், இப்பொழுதுதான், கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்ற நினைப்பே வந்ததுபோலவும் எண்ணிக் கொள்ளச் சொல்கிறாரா?

முன்பாகிலும், கழகத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்கு ஒரு காரணம் காட்டிக் கொண்டிருந்தார்கள். 'ஓட்டு' கேட்கிறது நாட்டை ஆளவிரும்புகிறது என்பதுபற்றி எமக்குக் கோபம் இல்லை. ஆனால் இந்தக் கழகம் நாட்டை அல்லவா பிளக்கவிரும்புகிறது; பிரிவினை அல்லவா கேட்கிறது! இது பெரியதோர் ஆபத்தல்லவா? இதனை அனுமதிப் போமா! அதனால்தான் இந்தக் கழகத்தை ஒழித்தாக வேண்டும் என்கிறோம். அறிக! அறிக!—என்று ஆர்ப்பரித்தனர்; கழகமோ, நாட்டைத் துண்டாடும் திட்டத்தை விட்டு விட்டது. மரண அடி கொடுக்கவேண்டும் என்று இப்போது ஏன் கூறவேண்டும்?

முன்பு, நாடு பிளவுபடாதிருக்க கழகத்தை ஒழித்திடவேண்டும் என்று பேசினர்.

இப்போது? கோபத்துக்குக் காரணம்?

பதவியைப் பறித்துக்கொள்ளத் திட்டமிடுகிறார்களே என்பதுதானே!

அதற்கான வலிவும் வளர்ச்சியும் பொது மக்கள் ஆதரவினால் கழகத்துக்குக் கிடைத்துக் கொண்டு வருகிறது என்பதாலே ஏற்பட்டிருக்கும் எரிச்சல்தானே, கோபத்துக்குக் காரணம்?

சரி! கோபம் கொண்டதற்கான காரணம்கூட கிடக்கட்டும்; மரண அடி கொடுக்கிறேன் என்கிறாரே அதற்குத் தேவையான 'வலிவு' உள்ளபடி இருக்கிறதா? இருந்திருந்தால், கழகம் இந்த வளர்ச்சி பெற்றபோது, என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

கழகமா? அதற்குச் செல்வாக்கா! எதைக் கொண்டு சொல்லுகிறீர்கள். கூட்டத்திற்கு ஆள் சேருகிறதே அதைப் பார்த்தா? பைத்தியக்காரன் பின்னாலேகூடத்தான் பத்துபேர் செல்கிறார்கள்; வேடிக்கை பார்க்க! அந்தக் கும்பலைக் கண்டு, அவனுக்குப் பெரிய செல்வாக்கு என்று சொல்லிவிட முடியுமா—என்று பேசிப் பார்த்தார் பேட்டைப் பெரியவர்; கோட்டையிலே கொலுவிருக்கிறோம் என்ற துணிச்சலால்.

தெருக்கோடியிலே பிச்சைக்காரன் இனிமையாகப் பாடினால், அவனைச் சுற்றி ஒரு கூட்டம் சேரும்; காசுகள்கூடப் போடுவார்கள்! அதனால் அந்தப் பிச்சைக்காரன் பெரிய மனிதனாகி விடுவானா என்று கேட்டார் விருதுநகர் வல்லவர்.

ஆனால் பொதுமக்கள் இத்தகைய பொறுப்பற்ற முறையிலே நினைக்கவில்லை; கழகத்தை ஆதரிக்கலாயினர்.

கை தட்டுவார்கள், ஆனால் ஓட்டுப் போடுவார்களா?

என்று கேட்டுக் கெக்கலி செய்தார் காமராஜர். கழகம் 'ஓட்டு' கேட்டது. பொதுமக்கள் முதல்முறை 16,28,598 ஓட்டுகளை வழங்கினர்.

வெட்ட வெளியோடு சரி, இவர்களை எவனாவது சட்டசபைக்கு அனுப்பிவைப்பானா? என்று பேசியவர்கள், பொதுமக்கள் கழகத்துக்குத் தந்த ஆதரவின் கணக்குத் தெரிந்த பிறகாகிலும், ஜனநாயகப் பண்பின்படி, கழகத்துக்கு உரிய மதிப்பு அளித்திட முன் வந்தனரா? இல்லை!

கண்டபடி எழுதுகிறார்கள் கழகத்துக்காரர்கள்.

இவர்கள் கை கட்டை விரலை வெட்டி விடுவேன்!!

என்று பேசினார், கண்ணியம் மிக்க காமராஜர்.

அவர் அளவுக்கு ஆத்திரப்படாதவர்கள், 'ஐயோ பாவம்' என்று பாச்சாதாபப்பட்டு, சிலர் ஓட்டுப் போட்டு விட்டார்கள். அடுத்த தடவை பாருங்கள் அந்தக் கழகம் என்ன கதியாகிறது என்பதை. மழைகாலத்துக் காளான் சூரிய வெப்பம் பட்டதும் கருகிப் போவதுபோல, இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்து போய்விடும் என்று ஆரூடம் கணித்தார்கள்.

ஆனால் பொதுமக்கள் இரண்டாவது முறை கழத்தை மேலும் அதிக அளவு ஆதரித்து 34 இலட்சம் வாக்குகளை வழங்கினர்.

இவ்விதம் இருமுறை மக்கள் கழகத்தை ஆதரித்தும், பெறவேண்டிய தெளிவைப் பெறாமல், இந்த முறை பாருங்கள்! மரண அடி கொடுக்கிறேன்!!—என்று பேசுகிறார், காமராஜர்.

"பெரியவர்" என்ற புதிய பட்டம் சூட்டி இருக்கிறார்கள், அவருக்கு. 'பெரியவர்' ஆனது இதற்குத்தானா?

கூட இருந்து கும்மி கொட்டுபவர்களின் 'கோவிந்தா' கோஷம் இப்படியுமா அவரை பாழ்படுத்தி விடுவது.

பாரினில் இவர்போல் யாம் கண்டதில்லை —என்று அவர்கள் பாடிடும் பஜனை கேட்டா இவ்வளவு மயக்கம் இவருக்கு ஏற்பட்டு விடுவது!

ஆத்திச் சூடி தெரியுமா ஐயா! என்று இவரைக் கேட்டவர்கள்தான் இன்று அகில உலகில் இவர்போல் ஒரு தலைவர் இல்லை! என்று அர்ச்சிக்கிறார்கள் என்பதை இவர் அறியாரா?

எதனையும் சகித்துக் கொள்வேன்: ஆனால் என் தலைவன்மீது ஒரு துளி எச்சில் துப்பினாலும், விடமாட்டேன் ஒழித்திடுவேன் என்று இன்று பேசிடும் 'பக்தர்'கள், என்னைத் தமது தலைவன் என்று கொண்டிருந்தபோது, எவனாவது எங்கள் அண்ணன்மீது வசை உமிழ்ந்தால் "பாதக் குறடெடுத்து பன்னூறு அடி அடிப்பேன்" என்று பாடினவர்கள் என்பதை அறியாரா?

சிறுவர்களுக்கான பாடப் புத்தகத்தில், 'ராஜபக்தி'க்கான பாடம் ஒன்று உண்டு;

இதோ நமது ராஜா. இவர் மிக நல்லவர்!

இதுதான் பாடம்! ஒரு ராஜாபோய், வேறோர் ராஜா பட்டத்துக்கு வந்திடின், பழைய படம் எடுக்கப்பட்டு, புதிய ராஜாவின் படம் போடப்படும். படம்தான் மாறும்! பாடம் அப்படியேதான் இருக்கும்.

இதோ நமது ராஜா. இவர் மிக நல்லவர்!

இதற்கு ஒப்பான அரசியல் நடத்துபவர்கள் மொழிந்திடும் புகழுரை கேட்டு மயங்கியா, இந்தப் பூலோகமே தன் காலடியில் பந்தாகிக் கிடக்கிறது என்று மயக்கம் கொண்டுவிடுவது! நல்லது செய்யாதே அந்த மயக்கம்!

மரண அடி கொடுப்பேன் என்று பேசுகிறோமே; கேட்டிடும் குட்டிக் குபேரர்கள் கைதட்டி மகிழ்ச்சி காட்டுகிறார்களே; பிறகு அவர்கள் சிந்திக்கமாட்டார்களா; எந்தவிதமான வசதியுமில்லாமல், எல்லா முனைகளின் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு இந்தக் கழகம் இவ்வளவு வளர்ந்திருக்கிறதே; இப்போது மரண அடி கொடுப்பேன் என்று பேசிடும் பெரியவர், முன்பு பலமுறை கழகத்தை ஒழித்துக் கட்டுவதாகச் சொன்னவர்தானே; செய்தாரில்லையே; இப்போது மட்டும் எப்படிச் செய்வார் என்று யோசிக்கமாட்டார்களா: யோசித்திடும்போது நமது பேச்சு வெறும் உருட்டல் மிரட்டல்தான் என்பது புரிந்துவிடாதா- என்றெல்லாம் காமராஜர் எண்ணிப் பார்க்கமாட்டாரா? நேரம் இல்லை பாவம், அவர் என்ன செய்வார்! சூழ்ந்து கொண்டுள்ள 'சூடமேந்திகள்' அவருடைய சிந்திக்கும் சக்தியை பொசுக்கிவிடுகின்றனர்.

தம்பி! 1962ம் ஆண்டுக்கும் 1967 பிறக்கக போகிற கட்டமான இப்போதைக்கும் இடையில் காங்கிரசுக் கட்சிக்குத்தானுகட்டும், காமராஜப் பெரியவருக்குத்தானுகட்டும், கழகத்துக்கு மரண அடி கொடுக்கத்தக்க விதமான புதிய வலிவு என்ன கிடைத்துவிட்டது என்பது எப்போதாவது, எங்கேயாவது, எவராலாவது விளக்கப்பட்டுக் கேட்டதுண்டா?

1972-ம் ஆண்டு காங்கிரஸ் சில இடங்களிலே தோற்றதற்கும். எதிர்க்கட்சிகள் தேர்தல் களத்திலே வெற்றி பெற்றதற்கும் காரணம்,

வரி அதிகமானது

விலைவாசி ஏறியது

உணவு நெருக்கடி

ஏழை எளியோர் துயரம்

போன்ற நிலைமைகள். இதனால் மக்களுக்குக் காங்கிரசிடம் ஒரு கசப்புணர்ச்சி; கோபம்; பாடம் கற்பிக்க வேண்டும் என்ற துடிப்பு; அதன் காரணமாகக் காங்கிரசைத் தோற்கடித்தார்கள். ஆனால் 1967-ம் ஆண்டு வேகமாக வந்துகொண்டிருக்கும் இப்போது அந்த மோசமான நிலைமைகள் மாறிவிட்டன; மக்கள் கசப்புணர்ச்சி கொள்வதற்குப்பதிலாக களிப்புணர்ச்சி கொண்டுள்ளனர்; அதற்கான முறையில்,

உழுபவனுக்கே நிலம் என்று ஆகிவிட்டது.

தொழிலாளருக்கு நீதியும் நிம்மதியும் கிடைத்திருக்கிறது.

உணவு நெருக்கடி போக்கப்பட்டு விட்டது.

விலைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வரிகளையும் குறைத்தாகி விட்டது.

ஏழை எளியோர் புன்னகை புரிகிறார்கள்.

ஆகவே இந்த முறை மக்கள் காங்கிரசிடம் பாசம் காட்டுவர், எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு காட்டமாட்டார்கள்—என்று கூறமுடியுமா?—கூசாது பொய் பேசிப் பழகப்பட்டவர்களால்கூட முடியாது.

1962-ம் ஆண்டு இருந்த நிலைமையைவிட மிக மோசமான நிலைமை அல்லவா இப்போது; எல்லாத் துறைகளிலும். அப்போது இருந்துவந்த அல்லல் வளர்ந்தல்லவா இருக்கிறது. எலி தின்று பசி போக்கிக் கொள்ளுங்கள் என்ற 'உபதேசம்' செய்கிற நிலைமையல்லவா காண்கின்றோம்.

இது மக்களின் கசப்புணர்ச்சியை, கொதிப்புணர்ச்சியை அதிகமாக்கித்தானே இருக்கும்?

இருந்தும், இம்முறை எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் அளவுக்குத் துணிவு எப்படி வந்தது துரைத்தனம் நடத்தும் கட்சியினருக்கு?

தம்பி! நாம் மட்டும் அல்ல, உண்மையான ஜனநாயகவாதிகள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வி. ஒரு கட்சியை மக்கள் வெறுத்து ஒதுக்குவதற்கு என்னென்ன கொடுமைகளை அந்தக் கட்சி நடத்திடும் ஆட்சி செய்திட வேண்டுமோ அவ்வளவும் செய்தான பிறகு, அந்தக் கட்சித்தலைவர், எதிர்க் கட்சிக்கு மரண அடி கொடுப்பேன் என்று பேசும் துணிவு, எதைக் கொண்டு பெறமுடிகிறது?

பணம், தம்பி! பணம்! மூட்டை மூட்டையாகச் சேர்த்து வைத்துள்ள பணம்!

பணம் பாதாளம்வரை பாயும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

வாய்க் கசப்பைப் போக்க, நாக்கிலே தேன் தடவுவதுபோல, கசப்புணர்ச்சி கொண்டுள்ள மக்களுக்கு, பணத்தாசை காட்டி, மயங்கிடலாம் என்ற நம்பிக்கை.

ஏழ்மையும் அறியாமையும் கப்பிக் கொண் கொண்டிருக்கும் நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மக்களை மீண்டும் வலைவீசிப் பிடித்துவிடலாம் என்ற நைப்பாசை.

இதனை மறுத்திட நினைத்திடும் மகானுபாவர்கள், 1962-ம் ஆண்டிலே இருந்த கசப்புணர்ச்சி போய்விட, இந்த ஐந்து ஆண்டுகளிலே காங்கிரசாட்சி எடுத்துக்கொண்ட முயற்சிகளிலே எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை விளக்கிடக் கேட்டதுண்டா?

விளக்கமாவது அவர்களாவது தருவதாவது! ஒரே வீராவேசம் அல்லவா பொங்கி வழிகிறது! பெரியவரே, மரண அடி கொடுப்பேன் என்ற தரமான பேச்சுப் பேசும்போது 'பொறியர்கள்' பேசுவது எந்தத் தரம் இருக்கும் என்பதைக் கூறவா வேண்டும்?

ஏடா! மூடா! எமக்கு இதுபோது வந்திருக்கும் புதிய வலிவுக்கான காரணம் புரியாது கிடக்கின்றனையே! கூறுதும் கேண்மின்! இது காமராஜர் சகாப்தம்! அறிந்திடுமின்! அவர் புகழ் அவனியெல்லாம் பரவியுள்ள காலம்! பொருள் புரிந்துகொள்ள

முனைமின்!-என்ற முறையில் நா நடமிடுவது தெரியும், தம்பி! நன்றாகத் தெரியும்.

காமராஜப் பெரியவரின் புகழ் இந்தக் காசினி எங்கும் பரவியுள்ள கதை சுவையுள்ளது.

ஆனால் அந்தப் புகழ் காங்கிரசுக்குப் புது வலிவும் பொலிவும் தேடிக்கொடுத்து, மக்களின் கசப்புணர்ச்சியை மாற்றிவிடும் அளவினது, அல்லது வகையினது என்றால்,

தம்பி! 1962-ம் ஆண்டுத் தேர்தலின்போது 'முடிசூடா மன்னராக'— 'ஆசியாவின் ஜோதியாக'—மகாத்மாவின் வாரிசாக—இருந்துவந்தாரே பண்டித ஜவஹர்லால் நே ரு, அவருக்குப்' புகழ் ஏதும் இல்லையோ!!

அந்தப் புகழ் இருந்தும்தானே, எதிர்க் கட்சிகள் வளர்வதைக் காங்கிரசினால் தடுத்திட முடியாமற் போய்விட்டது?

இன்று இருப்பதைக் காட்டிலும் சிறிதளவு குறைவாகவே அல்லலும் அவதியும் மக்களை வாட்டிக் கொண்டிருந்தபோதே 'நேருவின் புகழொளியில் மயங்கி, மக்கள் எதிர்க்கட்சிகளை ஆதரிக்க முடியாது என்று கூறிவிடவில்லை.

நேருவின் 'புகழொளிக்கு இருந்ததைக் காட்டிலும் வசீகரமும் வல்லமையும் காமராஜர் புகழொளிக்கு உண்டு என்று கூறுவார் உண்டா?

நேருவினால் அவர் நாட்களில் சாதிக்க முடியாது போனவைகளைக் காமராஜர் இன்று சாதிக்கப்போகிறார் என்று கூறுவார் உண்டா?

நேருவைக் காட்டிலும் காமராஜர், உலக மறிந்தவர்; நேருவிடம் உலகம் காட்டிய மதிப்பைவிட அதிக அளவு மதிப்பினைக் காமராஜரிடம் காட்டுகிறது; நேருவின் அறிவாற்றலைக் காட்டிலும் பன்மடங்கு அதிக அளவு கொண்டவர் காமராஜர்; பிரச்சினைகளை விளக்குவதில், வாதத்திறமையில், சிக்கல்களை நீக்குவதில், நேருவுக்கும் இல்லாத திறமை இவருக்கு உண்டு என்பார் உண்டா?

மக்களைத் தன்வயப்படுத்திடும் ஓர் புன்னகை, கோபத்தையும் கொதிப்பையும் கூட ஓரளவு மறந்திடச் செய்திடும் நடை அழகு, உலகப் பிரச்சினைகளைப் படம் பிடித்துக் காட்டும் தனித்தன்மை, உலகின்பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் மட்டுமல்லாமல், கவிஞர்கள், தத்துவ மேதைகள், காவிய கர்த்தாக்கள், விஞ்ஞான வித்தகர்கள், பொருளாதார நிபுணர்கள், புரட்சி பூத்திடச் செய்த மாவீரர்கள் ஆகியோருடன் நேசத் தொடர்பு கொண்டிருந்ததால் ஏற்பட்டிருந்த விசாலமான நோக்கம், தாராளத் தன்மையுடைய சிந்தனை, இதயங்களை ஈர்த்திடத்தக்க இலட்சிய ஆர்வம் இவ்வளவும் கொண்டலல்லவா விளங்கி வந்தார் பண்டிதர்.

அவர் புகழ் பாடாத ஏடுண்டா? பரவாத நாடுண்டா? படம் இல்லாத வீடு உண்டா?

எத்தனை எத்தனை கோலத்தில் அவர் படம்; நித்தநித்தம்; இதழ்கள்மூலம்.

சிந்திக்கும் நேரு, சிரித்திடும் நேரு, சீறிடும் நேரு, குழந்தைகளுடன் கொஞ்சிடும் நேரு, விளக்கிடும் நேரு, வினவிடும் நேரு, மாபெருங்கூட்டம் கண்டு நெஞ்சு நெகிழ்ந்திடும் நேரு, ஊர்வலத்தில் முகம் மலர்ந்திடும் நேரு, விமான நிலையத்தில் நேரு, விஞ்ஞானக் கூடத்தில் நேரு, குதிரைமீது நேரு, குதூகல நடனமிடும் நேரு. ஜொலிக்கும் நட்சத்திரங்களுடன் நேரு, உழைக்கும் பாட்டாளிகள் மத்தியில் நேரு, பத்திரிகை நிருபர்களிடம் நேரு, வணிகர் விழாவில் நேரு, பக்ரா பக்கத்தில் நேரு, குலு பள்ளத்தாக்கில் நேரு, நாகநாடு உடையில் நேரு, பர்மிய கோலத்தில் நேரு, ஆங்கில உடையில் நேரு, கேக் வெட்டும் நேரு, பாக்—அதிபருடன் நேரு, சோ-இன்லாயுடன் நேரு, கெனியாடாவுடன் நேரு, நைல் நதி தீரத்தில் நேரு, ரேவல்கா கரையில் நேரு, ஐ. நா. சபையில் நேரு, ஆல்ப்ஸ் குன்றில் நேரு, வெசுவயஸ் எரிமலை காணும் நேரு, லால்பகதூர் தோளைத் தடவிக் கொடுத்திடும் நேரு. தம்பி! ஒன்று இரண்டா, ஓராயிரம் மட்டுமா? ஓராண்டா ஈராண்டா? முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அல்லவா, அவர் திருஉருவம் கண்டு, நாட்டு மக்கள் சொக்கினர்!

**இருந்தும்? அவர் நடாத்திய ஆட்சி, மக்களுக்கு நல்வாழ்வு தரவில்லை என்று மனதார நம்பிய எதிர்க்கட்சிகள் அந்தப் புகழொளி கண்டு மயங்கி, முடங்கிக்கிடந்தனவா? இல்லையே?**

**அந்தப் புகழொளி எதிர்க்கட்சிகளை இருக்கும் இடம் தெரியாமலா செய்துவிட்டது? இல்லையே!**

**அவருடைய புகழ் ஒளிபோதும் தனி மராட்டிய மாநிலம் வேண்டாம் என்று கூறிவிட்டனர்? இல்லையே!**

**அந்தப் புகழொளி இருக்கும்போது நாம் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை—இந்தி வந்தால் வரட்டும் என்று இருந்துவிட்டனர்? இல்லையே!**

**குறைகளைக் கூறிட, கருத்து வேற்றுமைகளை எடுத்துரைத்திட, கிளர்ச்சி நடத்திட, கருப்புக்கொடி காட்டிட முடிந்தது எதிர்க்கட்சிகளால்-புகழொளி இருந்தும்.**

**நேருவின் புகழொளிக்கு இல்லாத வசீகரமும் வல்லமையும், காமராஜரின் புகழொளிக்கு இருக்கிறது என்று கூறிடக் கூசுவர் எவரும்; கூறிடத் துணிவோர், நேருவின் நினைவுக்கே கறை பூசிடும் காதகராவர்.**

நேருவின் புகழொளியையே இவ்வளவு விரைவிலே மறந்து, வேறோர் புகழொளி அவருடையதைவிட வலிவுள்ளது என்று பேசிடத் துணிவோர், இந்தப் புதிய புகழொளியை எத்தனை சடுதியில் மறந்திடத் துணிவர் என்பதை எண்ணும்போது, தம்பி! எவருக்கும் நடுக்கம் எடுக்கும்.

என்றாலும், கூசாமல் கூறுகின்றனர், காமராஜரின் புகழொளி காங்கிரசுக்குப் புதிய வலிவைக் கொடுத்துவிட்டது; எதிர்க்கட்சிகளுக்கு இனி எதிர்காலம் இல்லை; கசப்புணர்ச்சி கொண்டிருந்த மக்கள் இப்போது களிநடமிடுகின்றனர் என்றெல்லாம்.

அதுபோலக் கூறுபவர்களின், 'போற்றி! போற்றியை'ப் பொருள் உள்ளது என்று எண்ணிக்

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


கொண்டு காமராஜப் பெரியவர் 'மரண அடி கொடுப்பேன்'—என்று முழக்கமிடுகிருர்,

தி. மு. கழகம் 34 இலட்சம் வாக்குகளைப் பெற்ற போது 'ஆசியஜோதி' ஒளிவீசிக்கொண்டிருந்திடக் கண்டோம்.

அந்தப் புகழொளி கண்டு மயங்கிடாத கழகம், மாய்ந்திடாத கழகம், காமராஜரின் 'புகழொளி' யைக் கண்டா, மிரண்டிடும்!

'புகழொளி'-தனி மனிதர்களின் அறிவாற்றலைக் கொண்டு அமைகிறது!

ஏழையின் இதயத்துக்கு நிம்மதியும், இல்லத்துக்கு நல்வாழ்வும், இதழுக்குப் புன்னகையும் தரத்தக்க ஆட்சிக் காகப் போரிடுபவர்கள், 'புகழொளி' போதும் என்று இருந்துவிடமாட்டார்கள்.

அத்தனைப் புகழொளியும் எமது பசியைப் போக்கிட வில்லையே; குமுறிக்கிடக்கின்ருேம்; வாழ்வு நிமிர்ந்திட வழி காணுேமே; என்ற ஏக்கக் குரலே எழுப்புவர்.

எதிர்க்கட்சிகள், ஏமாற்றமடைந்த, எரிச்சல் கொண்ட ஏக்கப் பெருமூச்சு எழுப்பும் மக்களின் படைப்புகள். எங்கிருந்தோ வந்து குதித்திடுபவைகள் அல்ல!

புகழொளிகளைப் புதிது புதிதாக உண்டாக்கிக் காட்டுவதால், எதிர்க்கட்சிகள் மடிந்திடா; மக்களின் முகத்தில் படிந்துள்ள கவலைக்கோடுகள் துடைக்கப் பட்டு வறுமை தாக்கியதால் ஏற்பட்ட புண் ஆற்றப்பட்டு கண்ணீர் துடைக்கப்பட்டாலொழிய, எத்தனை பெரிய எக்காளம் கிளப்பி, மரண அடி கொடுப்பேன் என்று உரத்தக் குரல் எழுப்பினுலும் விம்மும் மக்கள்கள் கட்டிக் காத்துவரும் எதிர்க்கட்சியினை ஒழித்திடுவது முடியாது காரியம்.

இதனைக் காமராஜர் அறியாமல் இருக்க முடியுமா? அறிவார்! ஆனுல் அவரை நம்பிக் கொண்டு, ஆனுல் கழக வளர்ச்சி கண்டு நடுங்கிக் கொண்டுள்ள 'கனதனவான்களு'க்குத் தெம்புதர, தைரியம் ஊட்ட மரண அடி கொடுக்கிறேன்!— என்று பேசுகிருர், பேசட்டும்.

அண்ணன்,

அண்ணாதுரை

25-9-66

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

முதலில் மங்கையர்க்கரசி வீட்டிற்குச் சென்று நச்சினார்க்கினியர் பற்றிய செய்திகளையறிந்து கொண்டு, உடனே திண்டிவனம் சென்று ஒப்பிலழக ரைக் காணவேண்டும்' எனத் தீர்மானித்தான்.

உடனே ஓர் வண்டியில் ஏறி மங்கையர்க்கரசி வீட்டிற்கு விரைந்தான் முகிலன்.

## 41

புகழேந்தியின் தந்தை ஒப்பிலழகர் படுக்கையில் கண்மூடிப் படுத்திருந்தார். அருகே துயரம் தேங்கிய முகத்தோடு புகழேந்தி அமர்ந்திருந்தான். அவன் அருகே கோதை அமர்ந்திருந்தாள். உலகைப் புரிந்து கொள்ளக்கூடிய உணர்வில்லாத கோதையின் குழந்தையுள்ளத்திலும் துன்பம் தன் வேர் பரப்பி வீற்றிருந்தது.

அறப்பாவை தந்தையாரின் காலடியில் அமர்ந்து ஒத்தடம் கொடுத்தவாறிருந்தாள். புகழேந்தியின் அன்னையார் மல்லிகையார் கஞ்சியைக் கலக்கி ஆற்றிக்கொண்டிருந்தார். கவலையும் ஆழ்ந்த எண்ணமும் செறிந்த தோற்றத்தோடு ஒப்பிலழகரின் தலைப்பகுதிக்கு அண்மையில் அமர்ந்திருந்த அதியமான், ஒப்பிலழகரின் நெற்றியைத் தொட்டுப் பார்த்துவிட்டு, சுடர்கொழுந்தைப் பார்த்தார். கூடத்துத் தூணில் சாய்ந்தவாறு மல்லிகையாரின் கட்டளையை எதிர்நோக்கியவாறு வெள்ளிவீதி நின்றிருந்தாள்.

முகிலனின் தாய் நாகம்மையார் அடுக்களையில் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். மன்னுதனார் கைப்பையில் ஏதோ வாங்கி வந்து அடுக்களையினுள் கொடுத்துவிட்டுக் கூடத்திற்கு வந்து ஒப்பிலழகரை ஆர்வமும் பாசமும் பொங்க நோக்கியபின் ஒருபுறம் அமர்ந்தார்.

குழப்பம்—சோர்வு—எதிர்பார்ப்பு—அச்சம்—அவலம்—ஆகியவை சூழ்ந்திறுகிக் கிடந்த அச்சூழ்நிலையில் முகிலன் வீட்டினுள் நுழைந்தான் பரபரப்போடு. நேரே ஒப்பிலழகரைப் போய்ப் பார்த்தான்.

அதியமான் 'வாங்க' எனக் கூறினார்

மல்லிகையார் கண்களில் அவனைக் கண்டதும் கண்ணீர் கசிந்தது.

சுடர்க் கொழுந்தைப் பார்த்த முகிலன், "எப்போது வந்தீர்கள்? அவருக்கு எப்படியிருக்கிறது?" என வினவினான்.

"நாங்கள் வந்து மூன்று—நான்கு நாட்கள் ஆகிவிட்டன. அவர் நிலை அப்படியே இருக்கிறது." என்றார்.

புகழேத்தியின் தோளை மெல்லத் தொட்ட முகிலன் அமைதியாக அவனை ஆழ்ந்து நோக்கினான்.

பிறகு தோட்டத்திற்குச் சென்று கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்தான்.

"யாரிடம் காட்டுகிறீர்கள்?" எனக் கேட்டான்.

"இராசதிலகம்" அவர்களிடம்தான் என்றார் சுடர்க்கொழுந்து.

உடனே முகிலன் மருத்துவர் இராசதிலகம் இல்லத்திற்குச் சென்றான். ஒப்பிலழகர் உடல்நிலை குறித்து உசாவியறிந்தான். 'இன்னும் விலையுயர்ந்த மருந்து ஆயினும் எழுதிக் கொடுத்தால், வாங்கி வருவேன், கொடுத்துப் பார்ப்போமே?" என அவரைத் தூண்டினான்.

மருத்துவர் ஓர் உயர்ந்த மருந்தை எழுதிக் கொடுத்தார். அதனைப் பெற்றவுடன் பேருந்து வண்டியேறி சென்னை சென்றான்.

மருந்து வாங்கிக் கொண்டுவந்த முகிலன் மங்கையர்க்கரசியின் வீட்டிற்குச் சென்று ஏதேனும் செய்தி கிடைக்குமா எனத் தெரிந்து கொண்டு அடுத்த வண்டிக்குத் திண்டிவனம் சென்று விடலாம் என முடிவு செய்தான்.

மங்கையர்க்கரசியின் இல்லத்தினுள் நேரே நுழைந்து கூடத்தை அணுகினான்.

படுக்கையில் படுத்துக்கொண்டு கரையில்லா எண்ணக் கடலில் நீந்திக் கொண்டிருந்த மங்கையர்க்கரசி திரும்பிப் பார்த்தாள்.

முகிலனைக் கண்டதும் ஆர்வ முறுவலோடு விரைந்தெழுந்து வந்தாள். அவள் முகத்தில் ஆவலும் உவகையும் குதித்தாடின.

"வாருங்கள். அமருங்கள்" என்றாள்.

சுவரில் மாட்டியிருந்த படங்களைப் பார்வையிட்டான் முகிலன்.

காமச் சுவையூட்டும் படங்களும், திரை நடிகைகளின் கவர்ச்சிப் படங்களும் சில அரசியல் தலைவர்களின் படங்களும் இருந்தன. வண்ணப் பொலிவுள்ள மங்கையர்க்கரசியின் மயக்கும் தோற்றமுள்ள படங்களும் அணிசெய்தன.

"இந்த ஏழையின் குடிசை எவ்வளவு தவம் செய்துள்ளது! எவ்வாறோ மனம்வந்து இங்கே வந்து விட்டீர்களே?" என நாடக முறையில் வரவேற்புரை கூறினாள் மங்கை.

நாற்காலியில் நன்றாகச் சாய்ந்தமர்ந்து கொண்ட முகிலன் உள்ளத்தில் ஓடிய ,எண்ணங்களை அவனே சுவைத்தான்.

'ஒரு வீட்டிலுள்ள படங்களைக் கொண்டேகூட அங்கு வாழும் மக்களின் மனப்பான்மையை 'எடை' போட்டு விடலாம் போலிருக்கிறதே. நல்ல இயற்கைக் காட்சிகளையோ, கலையுணர்வு கொழிக்கும் இலக்கியக் காட்சிகளையோ உயரிய புலவர், சான்றோர் உருவங்களையோ வரலாற்று எழிலோவியங்களையோ சுவரில் மாட்டி வைக்காமல், கயமைக் கவர்ச்சிப் படங்களை மாட்டியிருக்கிறாளே மங்கை! இதனால் நல்லவர் தம் வீடுகளில் படங்களையே மாட்டிவைப்ப தில்லைபோலும்!' என எண்ணிக் கொண்டான்.

சிறிது நேரத்திற்குள், இருகுவளைகளில் தேனீரும் பிசுகோத்துகளும் கொண்டுவந்து மிசைப் பலகை மீது மங்கையர்க்கரசி வைத்தாள். முகிலன் உண்ண லானான். அவள் நோக்கு முகிலன் முகத்தையே மொய்த்திருந்தது.

"என்னங்க? பேசாமல் இருக்கிறீர்கள்?"

"என்ன பேசுவது? எதைப் பேசுவது? எப்படிப் பேசுவது எனத் தெரியவில்லை."

"அப்படியா? நல்லது. நீங்கள் எதையும் பேச வேண்டாம். அப்படியே இருங்கள். நான் இப்ப டியே நின்று கொண்டு உங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"வாழ்க்கை இப்படிச் சோம்பியிருப்பதற்காக ஏற்பட்டதன்று மங்கை. இருக்கட்டும். நச்சினார்க் கினியர், அடியார்க்கு நல்லார் ஆகியவர்கள் எப்படி இருக்கின்றனர்? ஏதேனும் செய்தியுண்டா? நான் விரைவில் திண்டிவனம் செல்லவேண்டும். அங்கே புகழேந்தியின் அப்பாவுக்கு உடல்நலமில்லை. அவருக்கு மருந்து வாங்கிப் போகவே நான் வந்தேன்."

"மருதனைப் பார்த்தேன். அவன் பல செய்தி களைச் சொன்னான். பாலுவும் வழுதியும் செங்கற் பட்டு மலைவீட்டில் போய்த்தங்க நச்சினார்க்கினியர் ஏற்பாடு செய்தாராம். அடியார்க்கு நல்லார் காஞ்சி சென்று அங்கே யாரோ இருவரைச் சந்தித்துப் பேசினாராம். மீண்டும் திரும்பும் வழியில் மலை வீட்டில் யாருமில்லையாம். படுக்கையறை அலங் கோலமாக இருந்ததாம் காவல்காரனை யாரோ இரவில் தாக்கியிருக்கிறார்கள். குருதிவெள்ளத்தில் கிடந்த அவனுக்கு மருத்துவம் பார்த்துவிட்டு அவன் வழி கிடைத்த செய்திகளைக் கேட்டுவிட்டு வந்திருக் கிறார். இதற்கிடையில் நச்சினார்க்கினியருக்கு எதிராகக் கட்சியில் பரிமேலழகன் கிளர்ச்சி செய்கி றானும். அடியார்க்கு நல்லார் வழுதியைப் பார்க்கச் சென்றார். வழுதி இன்னும் வீட்டிற்கே வரவில்லை யாம்! பாலுவும் இவர்கள் கண்ணில் தென்படவில்லை யாம்! குழப்பமாக இருக்கிறார்கள். அன்றிரவு யாரோ மலைவீட்டிற்கு வந்து ஏதோ செய்திருக்கிறார்கள், யார் என்று தெரியவில்லை. காவல் நிலையத்தில் அறிவித்து நடவடிக்கை எடுக்கச் செய்ய நச்சினார்க்கினி யருக்கு மனமில்லை. கிணறு வெட்ட பூதம் கிளம்புமோ என அஞ்சுகிறார்!"

"அப்படியா? நல்லது. நான் உடனே ஊருக்குப் போய் ஓரிரு நாட்களில் வருவேன். உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே புரியவில்லை."

"நன்றியா? எனக்கா? என்னை நீங்கள் மறக்கா மலிருந்தால் அது ஒன்றேபோதும். உம்..."




"உன்னை மறக்க முடியாது மங்கை. அதுவும் இப்போது நீ செய்யும் உதவி மறக்கமுடியாதது. நான் போய் வருகிறேன்."

"எங்கள் வீட்டில் என்னைப்பற்றி ஒன்றும் சொல்லிவிடாதீர்கள் மீண்டும் வாருங்கள்."

"சொல்லமாட்டேன். வருகிறேன்."

முகிலன் புறப்பட்டான்.

மங்கையர்க்கரசி விரல்களால் தன் கடைவிழிக் கண்ணீரை மெல்லெனத் துடைத்துக் கொண்டாள்.

## 42

சென்னையினின்றும் மீண்ட முகிலன் மருந்தை ஒப்பிலழகருக்கு அளிக்க ஆவன செய்தான்.

மருந்தை உள்ளே விழுங்கவும் இயலவில்லை. ஒப்பிலழகர் வாயை வலிய திறக்கச் செய்து அறப் பாவை மருந்தை உள்ளே புகட்டினாள்.

குளித்துவிட்டு வந்த முகிலன் உடையணிந்து கொண்டு சுடர்க்கொழுந்தின் அருகில் அமர்ந்தான்.

"அப்பாவுக்கு இப்படி உடம்புக்கு நோய் வரு மென்று நான் நம்பவே இல்லை. எவ்வளவு முறை யான—நெறியான வாழ்க்கை வாழ்ந்தார்! ஒருகுறை எதிலும் நேராதபடி இருந்தார். அவருக்கும் நோய் வந்து வாட்டுகிறதென்றால், நமக்கெல்லாம் என்ன தான் வராது?" எனக் கேட்டான்.

புகழேந்தியின் தந்தை ஓரளவு உணர்ச்சி வரப் பெற்றவரானார்.

கண்ணீர் மல்க, உள்ளத்துணர்ச்சி மல்க, எதிர் பார்ப்பு வழியும் விழிகளோடு எல்லாரும் அவரையே நோக்கினர்.

வெள்ளிவீதி முன்றானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். துன்பவெப்பத்தில் அந்த இளமைக் கொடிவாடிக் கிடந்தது.

புகழேந்தியைக் கண்ட ஒப்பிலழகர், விழிகள் விரிய ஆர்வமிக நோக்கினார். அவர்கண்களில் கரை கடந்த தந்தையைப் பாசத்தின் வெள்ளமாகக் கண்ணீர் அருவி வழிந்தது. புகழேந்தி, "அப்பா! அப்பா!" என ஆற்றாமைமிகக் கூறியவாறு அவர் கைகளை அன்பழுத்தத்தோடு பற்றினான். அவனகத் தைத் துன்பளரி வருத்தியது.

(வளரும்)

# சிதறிய முத்து

### ப. நா. கலைச்சுந்தரம்

கனகராஜ் எஸ்டேட்,
கால்பட்டு அஞ்சல்,
காரைக்குடி.

"விவசாயத்திலும் தோட்ட வேலையிலும் நல்ல அனுபவமிக்க இளைஞர் தேவை. வேலைக்கு வர விரும்புவோர் மேற்கண்ட விலாசத்தில் நேரில் காண்க."

மானேஜர்,
எம். மைதிலி.

இதற்குப் பிறகும் சந்திரனுக்கு அங்கிருக்க மனமில்லை. எப்பொழுது போகலாம், எப்பொழுது போகலாம் என்ற கேள்விக்கணைகளே அவன் உள்ளத்தைத் துளைத்துக் கொண்டிருந்தன.

நேரம் கடந்தது தேர்வில் சந்திரனே தோட்ட வேலைக்காரனாக நியமிக்கப்பட்டான்.

சந்திரன் தோட்டக்காரனாக வந்ததிலிருந்து, தோட்டமே ஒரு தனிக் காட்சிக்குறிய பிருந்தாவனமாக்கி விட்டான். பாழடைந்த இடங்களையெல்லாம் பசுஞ்சோலையாக்கினான். பயன் படாத இடத்தைக்கூட பூந்தோட்டமாக்கினான். எந்த ஒரு பொருளையும் தன் பொருளினும் மேலாக பாதுகாத்து வந்தான்.

இதனால் முதலாளி கனகராஜிக்கு சந்திரன்மேல் அளவுகடந்த பாசமும், பற்றுதலும் ஏற்பட்டது. அவனை தன் குடும்பத்தில் ஒருவனாகவே மதித்து வந்தார்.

இவர் தன் ஒரேமகள் சாந்திக்கு எஸ்டேட்டில் உருவாக்கப்பட்ட அழகிய பங்களாவையும், பூங்காவையும் பாதுகாக்கும் முழு பொறுப்பை சந்திரனிடம் ஒப்படைத்தார். சந்திரன் அந்த பங்களாவையும், பூங்காவையும் மேலும் பன்மடங்கு அழகு படுத்தினான்.

சாந்தியின் பிறந்தநாளும், பொங்கல் திருநாளும் ஒரேநாளில் வருவதால் இதை வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கனகராஜ் திட்டமிட்டிருந்தார். இதற்கான அலங்கார வேலைபாடுகளை சந்திரன் ஒருவனே கவனித்தான்.

விழாவுக்கு வருகைத்தந்த கல்லூரி மாணவிகளும், பெரும் புள்ளிகளும், ஓவியக்கலை நிபுணர்களும் அலங்கார வேலைப்பாடுகளைப் பார்த்து திரைப்படக் கலைஞர்கள்தான் இதை அமைத்தார்களோ! என ஐயுறும் வண்ணம் சந்திரனின் கலைத்திறமை அமைந்திருந்தது.

சாந்தி நீண்ட நாட்களுக்குப் பிறகு வீட்டிற்கு வந்திருப்பதால், எஸ்டேட்டையும், தன் பங்களாவையும் பார்க்க வேண்டுமென்று நினைத்தாள். இயற்கையை ரசிப்பதென்றால் சாந்திக்கு ஒரு தனி அலாதி. ஆகவே அவளே காரை எடுத்துக்கொண்டு எஸ்டேட்டிலுள்ள ஒவ்வொரு பகுதியாக சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள். தமிழின்மேல் அவளுக்குள்ள அன்பு அளவு கடந்தது. அவள் தமிழில்தான் இப்போது பி. ஏ. படித்துக் கொண்டிருக்கிறாள். இலக்கியத்தை படிப்பதும் இயற்கையை ரசிப்பதுமே அவளுக்கு பெரும் பொழுதுபோக்கு.

பளபளக்கும் காரிலே பவனி வரும் இவ்வேளையில் பளிங்குச் சிலை போன்ற அவள் பவளம் ஏந்திய செவிகளில் படர்ந்தது ஒரு சிங்காரநாதம், மெய்சிலிர்க்க வைத்தது அந்த மென்மையான குரல்.

"நாள்தோறும் நான் உன்னைப்
பாடுகிறேன்—வெகு
நாளாக நான் உன்னைத்
தேடுகிறேன்.
காலங்கள் மாறிய பின்னாலும்
—உந்தன்
கண்களில் நான் என்றும்
குடியிருப்பேன்!"

என்ற பாடலின் ஓசை அலைஅலையாக பாய்ந்ததைக் கண்ட சாந்தி திக்குமுக்காடினாள், திக்கெட்டையும் நோக்கினாள். காரைவிட்டிறங்கினாள். கால் நடையாக ஓடினாள். அவள் உள்ளமெல்லாம் புல்லரித்தது. உடலெங்கும் வேர்த்தது. எல்லை இல்லா அந்த இன்ப ஓசையில் இதயத்தையே பரிகொடுத்தாள். மலர்போன்ற அவள் பாதங்கள் மேடுபள்ளங்களையெல்லாம் தாண்டின. தளிர் போன்ற அவள் மேனி, தவழும் மரங்களையெல்லாம் விலகிச் சென்றன. பாடலும் முடிந்தது பாவையும் வந்து சேர்ந்தாள்.

"யார்நீ!"... "நீங்களா!" கன்னம் சிவந்தது, கண்கள் சுழன்றது மயங்கி வீழ்ந்தாள், மடியில் சாய்ந்தாள். மயக்கம் தெளிந்தாள், மைவிழியை திறந்தாள், "சந்திரன்"...என்று கதறியவாறு அவனை இருக்க அணைத்துக் கொண்டாள். சிறு குழந்தைப் போல விம்மி விம்மி அழுதாள். "நான் உங்களை இந்த கோலத்திலா பார்க்க வேண்டும்"... "சந்திரன் என்னால்தானே உங்களுக்கு இந்தகதி? நான் உங்களை தேடாத இடமில்லை, கேட்காத ஆளில்லை, எங்கெல்லாம் தேடி கிடைக்காமல் போகவே மனம் வெதும்பி என்னையே நான் மறந்து உங்கள் நினைவாலேயே நிலை மறந்திருந்தேன்." நான் கல்லூரிக்குக் கூடபோவது கிடையாது. நீங்கள் என்று கல்லூரியை விட்டு நின்று விட்டீர்களோ அன்றே நானும் நின்று விட்டேன். உங்கள் நினைவாலே இருந்த நான் என் தோழிகளின் வற்புருத்தலுக்கிணங்கி இப்போதுதான் கல்லூரிக்குப் போயிருக்கிறேன். "நீங்கள் என்னை மறந்து விட்டீர்களா." என்று கண்ணீர் மல்க கதறி அழுதுக் கொண்டே வார்த்தைக்குமேல் வார்த்தை அடுக்கிக் கொண்டே போனாள் சாந்தி.

'என்னை மன்னித்துவிடு சாந்தி.' "நான் ஒரு ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவன்! என்னை நீ காதலிப்பதால் பெரும் பணக்கார கூட்டங்களெல்லாம் உன்னை பழித்துப் பேசுவதை என் காதால் பலமுறை கேட்டிருக்கிறேன்!" அதுமட்டுமல்ல "ஜாதி, மதம் என்ற பெயரால் நான் தாழ்ந்த இனத்தவன் என்று என்னை தாக்கிப் பேசுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. தாழ்ந்த குலம்தான் நான்! குணத்தால் அல்ல. நம் காதலை துண்டிக்க வேண்டும் என்பதற்காக நான் எடுத்துக் கொண்ட முயற்சியெல்லாம் வீணாகி விட்டது. முடிவில் கல்லூரியை விட்டே ஓடி வந்து விட்டேன்."

"யார் கண்ணுக்கு தெரியக் கூடாது என்று ஊரை விட்டே ஓடி வந்தேனோ! அவர்களிடத்திலேயே விதி என்னை விளையாட வைத்து விட்டது."

"சந்திரன்! யார் யாருக்காகவோ நீங்கள் ஊரை விட்டே ஓடி வந்து விட்டீர்கள். ஆனால் ஊன் உறக்கமின்றி, உங்களுக்காகவே காலமெல்லாம் காத்துக் கிடக்கின்ற என்னை கதிகலங்க வைத்து விட்டீர்களே!"

"இனிமேல் நான் உங்களை விட்டு ஒரு வினாடிகூட பிரியமாட்டேன். உங்கள் காலடியே கதியாக இருப்பேன். என்னை ஏற்றுக்

கொள்ளாவிட்டால் இந்த இடத்திலேயே என் உயிரை போக்கிக் கொள்வேன்.''

நீங்கள் என்னை பணக்காரி உயர்ந்த ஜாதி என்று உதறித் தள்ளி விட்டீர்கள். அய்யோ!... அதை நினைத்தாலே நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருக்கிறதே! சொத்து, சுகம், உற்றார், உறவினர், பந்தபாசம், ஜாதி இவை எல்லாவற்றையும் விட்டு உங்களோடு வரத்தயார். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்.

கல்லூரிப் பூங்காவில் எனக்காக எழுதிப்பாடும் அந்த பாடலை நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்று கேட்டு என் மனம் குளிர்ந்தது. நான் பழைய சாந்தி இல்லை. இப்போது உங்கள் ஏழை சாந்தியாக வந்திருக்கிறேன் என்னைப் பாருங்கள்.

சாந்தி! உன் மனநிலை எனக்குப் புரிகிறது ஆனால் என் நிலையை நீ புரிந்துக் கொள்ளவில்லையே! நீ நன்றாக வாழ வேண்டு மென்றுதான் கூறுகிறேன்.

இவ்வளவு சொத்துக்களுக்கும் அதிபதியாக உள்ள நீ உங்கள் தோட்டத்திலேயே தினக்கூலியாக வேலைசெய்கின்ற என்னை! அதிலும் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த என்னை நீ மணக்க நினைப்பது நடக்கக் கூடிய காரியமா? இல்லை நினைத்துத்தான் பார்க்க முடியுமா? அதற்கென்று ஒரு அந்தஸ்து வேண்டாமா?

உனக்குத் திருமணம் என்று சொன்னால் அடுத்த வினாடியிலேயே கோடிக் கணக்கானோர் உங்கள் வாசலில் குவிந்து கிடப்பார்கள். படித்த பட்டதாரிகளாகவும், பணக்கார வீட்டு பிள்ளைகளாகவும், அழகில் மிகுந்தவர்களாகவும், அறிவாற்றல் படைத்தவர்களாகவும் காத்துக் கிடப்பார்கள் கண்ணே! கலங்க வேண்டாம்.

"நீங்களென்ன அதில் குறைந்தவர்களா? கல்லூரியிலே உங்களுக்கு நிகர் யாராவது இருக்கிறார்களா?"

"உங்கள் அழகில் அடிமையான பெண்கள் எத்தனையோபேர். அதில் நான் உங்கள் மனதில் நீங்கா இடம் பெற்றதற்காக பெருமையடைகிறேன்.''

போட்டிகளிலே கலந்துக் கொண்டு உரையாற்றும் போதும் கவிதைப் போட்டியிலே நீங்கள் முதல் பரிசு பெறுவதையும், உங்கள் அறிவுத் திறமையும் அழகையும் கண்டு அடுத்த பெண்கள் உங்களைப்பற்றி பேசும்போதெல்லாம் என் உள்ளம் என்ன பாடு படும் தெரியுமா...?

எனக்கு மட்டும்தான் நீங்கள் சந்திரனாக இருக்க வேண்டும். மற்றவர் மனதுக்கு எரியும் சூரியனாக இருக்க வேண்டுமென்று நினைத்ததுண்டு ''உங்கள் உள்ளத்தாலும் உடலாலும் கவரப்பட்ட என்னை சொத்து சொத்து என்று சொல்லி சித்திரவதை செய்யாதீர்கள்.''

"எப்படியோ! என்னை பேசவிடாமல் தடுத்து விட்டாய். இதெல்லாம் உங்கள் அப்பாவுக்கு தெரியுமா!''

"தெரியாது!'' இனிமேல்தான் சொல்லப்போகிறேன்.''

"சொன்னால் சம்மதிப்பாரா?''

நான் சொன்னபடிதான் என் தகப்பனார் கேட்பார். எங்கள் குடும்பத்துக்கு ஒரே வாரிசு நான் தான். என்தாய் இறந்ததிற்குப் பிறகு, என்னை அன்போடும் ஆசையோடும், என் விருப்பப்படி வளர்த்தார். என் விருப்பத்திற்கு மாறாக எதையுமே செய்யமாட்டார். நம் திருமண விஷயத்தைப்பற்றி நானே சொல்லுகிறேன் வாருங்கள்.

"நில்லுங்கள்!''

"அப்பா!''

"சீ!...என்னை அப்பா என்று இன்னொருமுறை கூப்பிடாதே!''

"என்னை மன்னித்து விடுங்களப்பா!''

"மன்னிப்பதா...!'' நீ என்ன தெருவிலா விளையாடிக் கொண்டிருக்கிறாய் உன்னை மன்னிப்பதற்கு.'

கேவலம் ஒரு தோட்டக்காரனோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பதை நான் மன்னித்து விடுவதா!

"அப்பா! என்னை வேண்டுமானால் ஏசுங்கள். அவரை ஒன்றும் சொல்லாதீர்கள்?"

"என் மானமே போச்சி. பல லட்சங்களுக்கு அதிபதியாக உள்ள நான், தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் செய்து விட்டாயே! உங்கள் இருவரையும் என்ன செய்கிறேன் பார்!"

"அப்பா''...என்று கதறிக் கொண்டே கனகராஜினுடைய கால்கள் இரண்டையும் பற்றிக் கொண்டாள். கனகராஜ் தன் இரு கண்களிலிருந்து வடியும் கண்ணீரை துடைத்துக் கொண்டு,

"எழுந்திரும்மா சாந்தி! உன்னை அழவைத்து விட்டேனா!'' என்று தன் மார்போடு மகளை அணைத்துக் கொண்டார்.

"இதுவரை நீ அழுது நான் பார்த்ததே இல்லை. உன்மேல் உள்ள அன்பால் விளையாட்டுக்காக அப்படிச் சொன்னேன்.''

நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். உன் விருப்பத்திற்கு மாறாக இதுவரை என்ன செய்திருக்கிறேன்? நீ நினைத்தபடி சந்திரனையே திருமணம் செய்துக்கொள்.

''முதலாளி!''

"சந்திரன்!...அப்படி சொல்லாதீர்கள்! இப்போது நான் உங்கள் மாமனார்."

"உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே புரியவில்லை.''

"நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம். என் மகளுக்காக எவ்வளவோ பெரிய தியாகத்தையெல்லாம் செய்திருக்கிறீர்கள். உங்கள் குடும்ப நிலையை நான் அறிவேன். இந்த எஸ்டேட்டில் உங்கள் கால்பட்ட அன்றே ஒரு புது மாற்றமே ஏற்பட்டது.

இவ்வளவு அறிவும், ஆற்றலும் உள்ள நீங்கள் ஒரு தோட்ட வேலைக்காரனாக வந்தது, உங்கள் பெருந்தன்மையையும், எந்த ஒரு வேலையையும் இழிவாக நினைக்கக் கூடாது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. உங்களைப் போன்ற மாப்பிள்ளையைத்தான் இதுவரை தேடியலைந்தேன். என்மகளுக்கு பொருத்தமான கணவன் உங்களைத் தவிர வேறுயாரும் இருக்க முடியாது. பணக்காரர்களை வெறுக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். எல்லா பணக்காரர்களும் ஒரேமாதிரியாக இருக்க மாட்டார்கள்.

"நான் பேரறிஞர் அண்ணாவின் வழியில் வந்தவன். ஜாதி, மதம், இனம், பணம் இதெல்லாம் எனக்குப் பெரிதல்ல, குணம்தான் தேவை. நீங்கள் என் மகளையே திருமணம் செய்துக்கொண்டு, மறுபடியும் இந்த வீட்டில் ஆனந்தம் மலரச் செய்யுங்கள் என்பதே எனது பணிவான வேண்டுகோள்"


கனகராஜ் சொல்லி முடித்ததுமே சந்திரனும் சாந்தியும் கனகராஜின் கால்களில் விழுந்து வணங்கினார்கள். இருவரையும் வாழ்த்தி விட்டு மேற்படி நடக்க வேண்டியவைகளை கவனிக்க சென்று விட்டார்.

சந்திரனும் சாந்தியும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் என்ன பேசுவதென்றே புரியாமல் காதல் கொந்தளிப்பில் ஊமையாகி விட்டார்கள்.

மயக்கம் தெளிந்த சந்திரன் சாந்தி

இன்று—உன் பிறந்த நன்னாளில் என்னையே பரிசாகக் கொடுக்கிறேன் எனக்கூறி, பூத்து சிரிக்கும் கொத்துமல்லிகையை பரித்து அவள் சித்திரக் குழலில் சிரிக்க வைத்தான்.

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

## குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
26, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.